## (ஒ) தொழில்நிலையும் தொழில் உறவுகளும்.

### 1. முன்னுரை

வேலைநிலை-வேலையின்மை என்பன சம்பந்தமான எண்தொகைகள் ஒரு ஒழுங்கான அடிப்படையில் திரட்டப்படுவதில்லை. தரவுகள் 1971 குடிசன மதிப்பீட்டின் பின் கிடைக்கத்தக்கதாயிருப்பினும், இவை பகுப்பாய்வுக்குக் கிடைப்பதற்குச் சிலகாலம் செல்லும். குடிசனமதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கையில் 1.11.1969இல் இருந்து இரண்டு மாதங்கள் கொண்ட காலப் பகுதியை உள்ளடக்கிய, சமூக பொருளாதார அளவை ஒன்றினை நடாத்தியது. இவ்வளவையின் முடிவுகளின்படி 3,518,000பேர் இருந்தவிடத்து 557,000பேர் வேலையற்றோராகக் காணப்பட்டனர், இவ்வாறாக வேலையற்றோர், வேலைப்படையின் 14 சதவீதத்தை உள்ளடக்கியிருந்தனர்.

மாதாந்த அடிப்படையில் இது சம்பந்தமாக கிடைக்கக்கூடிய எண்தொகைகள், நாட்டில் உள்ள தொழில்வாய்ப்பு நிலையங்களில் வேலை வேண்டியும், சிறந்த வேலை வேண்டியும் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கையேயாகும். இவ்வெண்தொகைகள் வேலையற்றோரின் எண்ணிக்கை சம்பந்தமான முற்றுப்பெறாத மதிப்பீடேயாகும். எனினும், இவை பெருமளவில் போக்கினைக் காட்டுகின்றன.

இவ்வெண்தொகைகட்கு பிரதியீடு செய்யும் ஒரு நோக்கோடு மத்திய வங்கி ஆண்டுதோறும், அரசாங்கத்துறையில் விசாரணைகள் நடாத்திவருகின்றது. வங்கி, கடைசியாக 1971ஆம் ஆண்டுக்குரிய தரவுகள் கிடைக்கக் கூடியதாக விருக்கும், ஊழியர் சேமநிதி (ஊ. சே. நி.)த் திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள ஊழியர்கள் சம்பந்தமான செய்திகளையும் பெற்றுக்கொள்ளுகின்றது. ஊ. சே. நி. எண்தொகைகள் இத்திட்டத்தைத் தவிர அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஊழியர் சேமநிதித்திட்டங்கள் (அ. த. சே. நி.) இருப்பதனால் முற்றுப்பெறாதவையாகக் காணப்படுகின்றன. இத்திட்டங்களில் இருந்து சம்பந்தப்பட்ட தொழில்நிலை எண்தொகைகளைக் கொள்வதன் மூலம் பூரணத்துவத்தினை அடைவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

### 2. தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை

தொழில்வாய்ப்பு நிலையங்களினால் 1960 தொட்டு 1972வரையான காலப் பகுதியில் வேலையில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கைகளின் வருடாந்த எண்தொகைகள் அட்டவணை 11 (ஒ) 1இல் தரப்பட்டுள்ளன. 1972ஆம் ஆண்டின் தொழில் வாய்ப்பு நிலையங்களினால் வேலையிலமர்த்தப்பட்டோரின் மொத்தத் தொகை 3,293ஆகும். 1972ஆம் ஆண்டில் இந்நிலையங்களினால் வேலையிலமர்த்தப்பட்ட எல்லா வகைத் தொழிலாளர்களினதும் (ஓரளவு தேர்ச்சி பெற்ற பிரிவினைத்தவிர) எண்ணிக்கை முன்னைய ஆண்டினது எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது குறைவாகக் காணப்பட்டது. வேலையிலமர்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

### அட்டவணை II (ஓ) 1

### தொழிலில் அமர்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கையும் ஒவ்வொரு பகுப்பிலும் பதிவு செய்யப்பட்டோரின் மொத்தத் தொகையில் அவர்களின் தொடர்பான முக்கியத்துவமும்

| ஆண்டு | தொழில்நுட்ப, எழுதுவினைஞர் | | தேர்ச்சிபெற்றோர் | | ஓரளவு–தேர்ச்சி பெற்றோர் | | தேர்ச்சிபெறுதோர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சத வீதம் |
| 1960 | 1,400 | 5.3 | 771 | 4.6 | 1,247 | 3.6 | 4,744 | 6.5 | 8,162 | 5.4 |
| 1961 | 1,259 | 4.6 | 631 | 3.5 | 964 | 2.8 | 2,794 | 3.9 | 5,648 | 3.7 |
| 1962 | 1,263 | 3.7 | 468 | 2.7 | 809 | 2.3 | 2,315 | 3.5 | 4,857 | 3.2 |
| 1963 | 1,322 | 3.7 | 502 | 3.0 | 836 | 2.3 | 2,466 | 3.9 | 5,129 | 3.4 |
| 1964 | 1,722 | 4.4 | 535 | 3.2 | 945 | 2.5 | 3,599 | 5.5 | 6,801 | 4.3 |
| 1965 | 1,495 | 2.7 | 846 | 4.2 | 1,035 | 2.1 | 3,753 | 5.0 | 7,129 | 3.6 |
| 1966 | 1,056 | 1.6 | 740 | 3.4 | 917 | 1.5 | 4,089 | 4.5 | 6,802 | 2.9 |
| 1967 | 1,018 | 1.4 | 588 | 2.5 | 712 | 1.1 | 1,936 | 2.1 | 4,254 | 1.7 |
| 1968 | 680 | 0.9 | 780 | 3.1 | 794 | 1.1 | 2,696 | 2.6 | 4,950 | 1.8 |
| 1969 | 865 | 1.0 | 710 | 2.3 | 800 | 0.9 | 2,908 | 2.1 | 5,283 | 1.5 |
| 1970 | 526 | 0.5 | 584 | 1.5 | 428 | 0.4 | 1,287 | 0.7 | 2,825 | 0.7 |
| 1971 | 640 | 0.6 | 778 | 1.8 | 462 | 0.5 | 1,701 | 0.9 | 3,581 | 0.8 |
| 1972 | 612 | 0.7 | 529 | 1.2 | 656 | 0.6 | 1,496 | 0.7 | 3,293 | 0 7 |

### 3. அரசாங்கத்துறையில் தொழில்நிலை

மத்தியவங்கியினுல் 1972ஆம் ஆண்டிற்கான அரசாங்கச் சார்புடைய தாபனங்களுக்கான (அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிலையங்கள், சபைகள் முதலியன) தொழில்நிலை பற்றிய அளவைக்குக் கிடைத்த பதில்கள் சிறப்பாகவிருந்தன. இதேபோன்று, அரசாங்கத்திணைக் களங்களின் தொழில்நிலை பற்றி நடாத்தப்பட்ட விசாரணைக்குக் கிடைத்த ஆதரவு குறைவானதாகும். விசாரணைக்குச் செவிசாய்க்காத திணைக்களங்களின் எண்தொகைகள் 1970-71ஆம், 1971-72ஆம் ஆண்டுகளுக்கான அரசாங்க இறைவரி, செலவினங்களின் மதிப்பீடுகளில் இருந்து பெறப்பட்டன. இம்மதிப் பீடுகள் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலைப்பிரிவினைகளை வழங்கியபோதும் அவற்றை உண்மையான தொழில்நிலை எண்களாகக்கொள்ளமுடியாது.

ஊழியர்கள் அவர்களின் வகைகளின்படியும், தரங்களின்படியும் (நிரந்தர, தற்காலிக, நாட்கூலி) பாகுபடுத்தப்பட்டுள்ளனர். கணக்கிலெடுக்கப்பட்டுள்ள வகைகளாவன.

1. உயர்பதவித்தரத்திலுள்ள நிருவாக தொழில்நுட்ப அலுவலர்கள்.
2. கீழமைந்த ஊழியர்கள்.
3. சிற்றூழியர்கள்.
4. பள்ளிக்கூட ஆசிரியர்கள் (அரசாங்கத் திணைக்களங்களைப் பொறுத்த வரை)
5. ஏனையவை.

## அட்டவணை II (ஒ) 2

### வேலைநிலைபற்றிய புள்ளிவிவரங்கள்—அரசாங்கத் திணைக்களங்கள்*

| தொழிற்பகுப்பு | தரமும் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் | | | | | | | | 1971க்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிரந்தரமான | | தற்காலிகமான | | நாட்கூலி | | மொத்தம் | | |
| | 1971 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1971 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1971 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1971 திசெம். 31 | 1972 திசெம். 31 | |
| 1. உயர்பதவியிலுள்ள நிருவாக, தொழில் நுட்ப, வாழ்க்கைத் தொழில் அலுவலர்கள் | 9,915 | 10,858 | 568 | 620 | 8 | 17 | 10,491 | 11,495 | + 9.6 |
| 2. கீழமைந்த ஊழியர்கள் | 99,500 | 108,500 | 1,700 | 2,560 | 1,850 | 2,954 | 103,050 | 114,014 | +10.6 |
| 3. சிற்றூழியர்கள் | 52,670 | 58,250 | 13,725 | 16,257 | 20,125 | 17,994 | 86,520 | 92,501 | + 6 9 |
| 4. பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 97,864 | 100,724 | — | — | — | — | 97,864 | 100,724 | + 2.9 |
| 5. ஏனையோர் | 28,944 | 29,956 | 852 | 936 | 942 | 1,053 | 30,738 | 31,945 | + 3.9 |
| மொத்தம் | 288,893 | 308,288 | 16,845 | 20,373 | 22,925 | 22,018 | 328,663 | 350,679 | + 6.7 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு:*

1. (i) சட்டவாக்க அலுவலர்களும், அரசாங்க நிருவாகிகளும்.
(ii) முகாமையாளர், தலைவர், ஏனைய உயர்பதவி அலுவலர்கள்.
(iii) விஞ்ஞானிகள், தொழில் நுட்பவாளர்களும் பொறியியலாளர்களும், வைத்தியர்கள், பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், கணக்காளர்கள், மதிப்பாளர்கள்.

2. (i) எழுதுவினைஞர் தரங்கள்.
(ii) காசாளர்கள்.
(iii) சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், சைபர் இயந்திர இயக்குநர்கள்.
(iv) தொலைபன்னி இயக்குநர்களும், அலுவலக எந்திர இயக்குநர்களும்.
(v) மொழிபெயர்ப்பாளர்கள்.
(vi) நீடிப்புப் பரிசோதகர்களும் விசாரணை அலுவலர்களும்.
(vii) காவலர்களும், கிராம சேவையாளர்களும்.
(viii) களஞ்சியக் காப்பாளர்.

3. (i) தூதறிவிப்பாளர்.
(ii) பணியாளர்.
(iii) கவனிப்பாளரும் ஏவலாளரும்.
(iv) சாரதிகள் (மோட்டார் வாகனங்கள், லொறிகள் முதலியன.)
(v) பயிற்சி பெறாத தொழிலாளர்கள்.
(vi) ஓரளவு பயிற்சி பெற்ற தொழிலாளர்கள்.

4. (i) முதல்வர்கள், துணை முதல்வர்கள், தலைமை ஆசிரியர்களும், உதவித் தலைமையாசிரியர்களும்.
(ii) பயிற்சி ஆசிரியர்களாகத் தகைமை பெற்றோர், தராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்களும், ஆங்கிலத் தராதரம் பெற்ற ஆசிரியர்களும்.
(iii) பட்டதாரிகள், இடைநிலைக் கலைப்பிரிவினர்.
(iv) சிறப்புத் தகுதி பெறுதோர், பகுதி நேர, நாட் சம்பள, ஆசிரியர்களும், பயிற்சி பெறும் ஆசிரியர்களும், மாணவ ஆசிரியர்களும்.

(அ) அரசாங்கத் திணைக்களங்கள்.

அரசாங்கத் திணைக்களங்களில் 1971, 1972 இல் இருந்த வேலைநிலையின் மதிப்பீடுகளை அட்டவணை II (ஒ) 2 காட்டுகிறது.

அட்டவணை காட்டுவதற்கமைய அரசாங்கத்திணைக்களங்களின் வேலை நிலை பற்றிய புள்ளிவிபரங்கள் அரசாங்கக் கல்லூரி ஆசிரியர்கள் பற்றிய தரவையும் உள்ளடக்குகிறது. அரசாங்கக் கல்லூரி ஆசிரியர்கள் 1971 இலும் 1972 இலும் மொத்தத் தொகையில் 29 சதவீதத்திற்கு வகை கூறியுள்ளனர் 1972 இல் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையில் 58 சதவீதமானோர் கீழமைந்த அலுவலர்களாகவும் சிற்றூழியர் வகுப்பைச் சார்ந்தவர்களாகவும் விளங்கினர். மொத்த எண்ணிக்கையில் கீழமைந்த ஊழியர்கள் 32 சதவீதத்திற்கு வகை கூற, சிற்றூழியர்கள் 26 சதவீதத்திற்கு வகைகூறினர். பல்வேறு வகுப்புகளிடை நிலவிய பரவலின் தன்மை 1971 இல் இருந்ததுபோலவே ஏறக்குறைய இருந்தது. மொத்த எண்ணிக்கையில் உயர்பதவி வகுப்பைச்சார்ந்தோர் 26 சதவீதமாக விளங்கினர்.

இரண்டு ஆண்டுகளிலும் மொத்த எண்ணிக்கையில் நிரந்தர ஊழியர்களின் பங்கு 87 சதவீதமாகவே இருந்தது தற்காலிக ஊழியர்களாக இருந்தோரின் எண்ணிக்கை 1971 இல் 5 1 சதவீதமாகவிருந்து, 1972 இல் 5.8 சதவீதமாக உயர்ந்தது. எனினும், 1971 இல் 13 சதவீதமாகவிருந்த அமைய ஊழியர்களின் எண்ணிக்கை 1972 இல் 6 சதவீதமாக வீழ்ச்சியுற்றது.

அரசாங்கத் திணைக்களங்களில் 1972 இல் பணிபுரிந்த ஊழியர்களின் எண்ணிக்கை 6.7 சதவீதத்தால் உயர்வுற்றது. 1971 உடன் ஒப்பிடுகையில் கீழமைந்த வகுப்பைச்சார்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை 10.6 சதவீதத்தால் அதிகரித்து மிகக் கூடிய அதிகரிப்பைப் பதிவு செய்தது. நிர்வாக வகுப்பைச் சார்ந்தோர் கல்லூரி ஆசிரியர்கள் சிற்றூழியர்கள் ஆகியோர் முறையே 9.6 சதவீதம், 2.9 சதவீதம், 6.9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தனர்.

(ஆ) அரசாங்கச் சார்புடைய நிறுவனங்கள் :

அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களின் தொழில் நிலைக்கான மதிப்பீடுகள் கீழே உள்ள அட்டவணை II (ஒ) 3 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கச்சார்புடைய நிறுவனங்களில் 1972 இல் தொழில் வாய்ப்பு அளிக்கப்பட்டோரின் எண்ணிக்கையின் வீதம் அதிகரித்தது. மொத்தத்தொழில் வாய்ப்பின் அதிகரிப்பு வீதங்கள் 1972 இலும் 1971 இலும் முறையே 13 1 சதவீதமாகவும், 3.3 சதவீதமாகவும் விளங்கின. இவ்விரிவின் வீத அதிகரிப்பு நிர்வாக அலுவலர்கள், சிற்றூழியர்கள் ஆகிய வகுப்புகளிலேயே பெரிதும் பிரதிபலித்தது. அவற்றின்விரிவு வீதங்கள் முறையே 15.97 சதவீதமாகவும், 20.52 சதவீதமாகவும் விளங்கின. 1971 இல் இவற்றின் தொடர்பான வீதங்கள் 9.4 சதவீதமாகவும், —2.4 சதவீதமாகவும் விளங்கின. கீழமைந்த ஊழியர்களின் வகுப்பைச்சார்ந்தோரின் சதவீத விரிவு 1971 இலும் 1972 இலும் ஏறக்குறைய ஒரே தன்மையுடையதாக விளங்கியது.

## அட்டவணை II (ஒ) 3

### தொழில்நிலைப் புள்ளிவிவரங்கள் — அரசாங்கச் சார்புடைய நிறுவனங்கள்

| | தரமும் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் | | | | | | | | 1972/ 1971 சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிரந்தரம் | | தற்காலிகம் | | நாட்கூலி | | மொத்தம் | | |
| | 1971 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1971 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1971 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1971 திசெம். 31 | 1972 திசெம். 31 | |
| 1.* நிருவாக, தொழில் நுட்ப, பயில் தொழில் அலுவலர்கள் ... | 11,796 | 13,539 | 325 | 578 | 241 | 220 | 12,362 | 14,337 | + 16.0 |
| 2.** கீழ்மைந்த ஊழியர்கள் | 23,307 | 25,806 | 728 | 722 | 884 | 477 | 24,919 | 27,005 | + 8.4 |
| 3.† சிற்றூழியர்கள் ... | 57,129 | 73,974 | 9,345 | 9,497 | 18,678 | 19,156 | 85,152 | 102,627 | + 20.5 |
| 4.‡ பள்ளிக்கூடஆசிரியர்கள் | — | — | — | — | — | — | — | — | — |
| ஏனையோர்கள் ... | 50,237 | 51,170 | 793 | 961 | 1,897 | 2,153 | 52,927 | 54,284 | + 2.6 |
| மொத்தம் ... | 142,469 | 164,489 | 11,191 | 11,758 | 21,700 | 22,006 | 175,360 | 198,255 | + 13.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1.* (i) சட்டவாக்க அலுவலர்களும், அரசாங்க நிர்வாகிகளும்.
(ii) முகாமையாளர், தலைவர், ஏனைய உயர்பதவி அலுவலர்கள்.
(iii) விஞ்ஞானிகள், தொழில் நுட்பாளர்களும், வைத்தியர்கள், பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், கணக்காளர்களும், மதிப்பாளர்களும்.

2.** (i) எழுதுவினைஞர் தரங்கள்.
(ii) காசாளர்கள்.
(iii) சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்களும் சைபர் இயக்குநர்களும்.
(iv) தொலைபன்னி இயக்குநர்களும், அலுவலக எந்திர இயக்குநர்களும்.
(v) மொழிபெயர்ப்பாளர்கள்.
(vi) நீடிப்புப் பரிசோதகர்களும், விசாரணை அலுவலர்களும்
(vii) காவலர்களும், கிராம சேவகர்களும்.
(viii) களஞ்சியக் காப்பாளர்கள்.

3.† (i) தூதறிவிப்பாளர்.
(ii) பணியாளர்.
(iii) கவனிப்பாளர்களும், ஏவலாளர்களும்.
(iv) சாரதிகள் (மோட்டார் வாகனங்கள், லொரிகள் முதலியன.)
(v) பயிற்சி பெறாத வேலையாட்கள்.
(vi) ஓரளவு பயிற்சி பெற்ற வேலையாட்கள்.
(vii) பயிற்சி பெற்ற வேலையாட்கள்.

4.‡ (i) முதல்வர்கள், துணை முதல்வர்கள், தலைமை ஆசிரியர்களும், உதவித் தலைமையாசிரியர்களும்
(ii) பயிற்சி ஆசிரியர்களாகத் தகைமை பெற்றோர், தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களும், ஆங்கிலத் தராதரம் பெற்ற ஆசிரியர்களும்.
(iii) பட்டதாரிகள், இடைநிலைக் கலைப் பிரிவினர்.
(iv) சிறப்புத் தகுதி பெறுதோர், பகுதி நேர, நாட் சம்பள, ஆசிரியர்களும், பயிற்சி பெறும் ஆசிரியர்களும், மாணவ ஆசிரியர்களும்.

1972 இல் அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களில் பணிபுரிந்த ஊழியர்களின் எண்ணிக்கையின் 52 சதவீதமானோர் சிற்றூழியர் வகுப்பைச்சார்ந்தோர் ஆவர். 1971 இன் தொடர்பான எண்தொகை 49 ஆகும். 1972 இல் கீழமைந்த ஊழியரினதும் நிர்வாக அலுவலர்களினதும் விகிதாசாரம் ஏறக்குறைய ஒரு தன்மையுடையதாய் விளங்கியது.

1972இல் மொத்த ஊழியரின் எண்ணிக்கையில் ஏறக்குறைய 83 சதவீதமானோர் நிரந்தர வகுப்பைச் சார்ந்தோராவர். 1971இல் இதன் தொடர்பான சதவீதம் 81 ஆக விளங்கியது. 1972இல் அமைய ஊழியர்கள் 11 சதவீதத்திற்கு வகைகூற 1971இல் இதன்தொடர்பான எண்தொகை 12 சதவீதமாக அமைந்திருந்தது. 1971இலும் 1972இலும் மொத்த எண்ணிக்கையில் தற்காலிக ஊழியர்கள் 6 சதவீதத்திற்கு வகைகூறினர்.

### 4. (அ) ஊழியர்சேமநிதியின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்கள்

ஊழியர்சேமநிதியின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஊழியரின் எண்ணிக்கை பற்றி இறுதியாகக் கிடைத்த எண்தொகைகள் 1971ஆம் ஆண்டிற்குரியதாகும். 1971இல் ஊழியர்சேமநிதிக்குச் செலுத்திய ஊழியரின் எண்ணிக்கை 34,460 ஆகும். ஒப்புநோக்குகையில் 1970இல் ஊழியர்சேமநிதிக்கு உதவுதொகை வழங்கியோரின் எண்ணிக்கை 23,159 ஆகும். வேறுசொற்களில் விளம்பின்

**அட்டவணை II (ஒ) 4**

**ஊ. சே. நி இன் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களது தொகை**

| கைத்தொழில் | ஆண்டு முடிவில் பதிவுசெய்யப்பட்ட தொகை | | | | |
|---|---|---|---|---|---|
| | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 |
| 1. ஏற்றுமதி விவசாயம் .. | 1,191,585 | 1,246,138 | 1,220,989 | 1,220,979 | 1,284,265 |
| 2. ஏனைய விவசாயம் ... | 3,734 | 4,743 | 6,415 | 5,100 | 7,455 |
| 3. சுரங்கத் தொழிலும் பார்குழித் தொழிலும் | 2,903 | 2,968 | 3,351 | 3,035 | 3,839 |
| 4. தயாரிப்புத் தொழில் .. | 160,839 | 174,187 | 206,194 | 222,955 | 264,007 |
| 5. கட்டட ஆக்கம் ... | 18,929 | 24,890 | 19,745 | 21,462 | 22,224 |
| 6. வர்த்தகமும் போக்குவரவும் ... | 163,574 | 176,502 | 186,733 | 198,196 | 236,530 |
| 7. பணிகள் ... | 92,458 | 99,452 | 105,794 | 115,161 | 125,086 |
| 8. பகுக்கப்படாதவை* ... | 18,930 | 11,388 | 4,719 | 8,557 | 13,813 |
| **மொத்தம்** ... | **1,652,952** | **1,740,268** | **1,753,940** | **1,828, 445** | **1,957,239** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* பிழைகளையும், தவறுகளையும் உள்ளடக்கும்.

(i) இவை தொழிலைவிட்டு நீங்கியும் ஊ. சே. நி. உடன் வரவு நிலுவைகளைத் தொடர்ந்து வைத்திருக்கும் ஊழியர்களையும் உள்ளடக்கும்

(ii) தற்போது வேறு தகவல்கள் இன்மையால், கைத்தொழிலின்படியான இப்பகுப்பு, தாபனத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டதாகும். அநேக சமயங்களில் இத்தாபனங்கள் தங்கள் கைத்தொழிலின் தன்மையைக் காட்டவில்லை. எனவே இது திருத்தமற்ற பகுப்பாகும்.

1971இல் ஏற்பட்ட அதிகரிப்பு 49 சதவீதமாகும். எல்லா ஊழியர்களையும் உள்ளடக்கும் முறையில் ஊழியர்சேமநிதி விரிவுபடுத்தப்பட்டதும் இதற்கு ஓரளவு காரணமாகும். முன்பெல்லாம் மூன்றிற்கு உட்பட்ட ஊழியர்கள் கொண்ட நிறுவனங்களுக்கு ஊழியர் சேமநிதிக்கு உதவுதொகை வழங்குவதி லிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஊழியர் சேமநிதி தனியார்துறை ஊழி யர்களை உள்ளடக்குவதுடன் பெருங்கூட்டுத்தாபனங்களாகிய துறைமுக சரக் குக் கூட்டுத்தாபனத்தையும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தையும் தனக்குள்ளடக்கியுள்ளது. 1967-71உக்காய எல்லையில் ஊழியர்சேமநிதியில் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் முக்கிய கைத்தொழில் வகுப்புகளின் அடிப் படையில் பகுக்கப்பட்டு அட்டவணை 11 (ஒ) 4இல் காட்டப்பட்டுள் ளனர்.

1971இல் ஊழியர் சேமநிதியின் பதிவுசெய்யப்பட்ட மொத்த ஊழியர் களில் 66 சதவீதமானோர் வேளாண்மையிலும், 13 சதவீதமானோர் தயாரிப் பிலும் 12 சதவீதமானோர் வர்த்தகத்திலும், போக்குவரத்திலும் பணிபுரிந் தோராவர். முக்கிய கைத்தொழிற் பிரிவுகளில் பணிபுரிந்தோரின் தன்மை சென்ற ஆண்டுகளைப்போல் அடிப்படையில் ஒன்றாகவே விளங்கியது. 1970இன் மொத்த எண்தொகையிலும் பார்க்க 1971இல் ஊழியர் சேமநிதியில் பதிவு செய்தோரின் எண்ணிக்கை 7.0 சதவீதத்தால் உயர்ந்தது. 1967-71 காலப் பிரிவில் பதிவுசெய்தோரின் சராசரி ஆண்டு வளர்ச்சி 4.6 சதவீதமாகும். 1971இல் ஏனைய வேளாண்மைத் துறையிலேயே (46 சதவீதத்தால்) பெரு மளவு அதிகரிப்பு நிகழ்ந்தது. அதேவேளையில் வர்த்தகத்திலும் போக்குவரத் திலும் (19 சதவீதத்தால்) தயாரிப்பிலும், (18 சதவீதத்தால்) சேவைகளிலும் (8 சதவீதத்தால்) கணிசமானளவு அதிகரிப்புக்கள் ஏற்பட்டன.

அட்டவணை 11 (ஒ) 5 ஊழியர் சேமநிதியில் பதிவுசெய்துள்ள ஊழியர்கள் கைத்தொழில், மாவட்ட அடிப்படையில் பரவியுள்ள தன்மையைக் காட்டுகிறது.

ஊழியர்சேமநிதியில் பதிவுசெய்த மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் கொழும்பு மாவட்டத்துக் கைத்தொழில்களிற் பணிபுரிந்தோரில் 23 சதவீத மாக விளங்கினர். அத்துடன், கண்டியில் 15 சதவீதமானோரும், இரத்தின புரியில் 10 சதவீதமானோரும், பதுளையில் 8 சதவீதமானோரும் பணிபுரிந்தனர். மாவட்ட அடிப்படையிற் பார்க்கையில் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் பரவி யிருந்த தன்மை சென்ற ஆண்டுகள்போன்றே ஏறக்குறைய ஒரே தன்மையு டையதாய் விளங்கியது. கொழும்பு மாவட்டத்திற் பதிவுசெய்யப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் தயாரிப்பில் 41 சதவீதத்தினரும் வர்த்தகத் திலும் போக்குவரத்திலும் 31 சதவீதத்தினரும் சேவைகளிற் 16 சதவீதத் தினரும் பணியாற்றினர். ஏனைய மாவட்டங்களில் பணிபுரிந்த ஊழியர்களில் பெரும்பான்மையோர் வேளாண்மைத் துறையிலேயே ஈடுபட்டிருந்தனர்.

## அட்டவணை II (ஏ) 5

### மாவட்டங்களின்படியும், கைத்தொழில்களின்படியும் ஊ. சே. நி. இன் கீழ்ப்பதிவு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை -1971

வருடமுடிவில் எண்தொகை

| கைத்தொழில் \ மாவட்டம் | கொழும்பு | கேகாலை | மாத்தறை | இரத்தினபுரி | கண்டி | நுவரெலியா | களுத்துறை | யாழ்ப்பாணம் | புத்தளமும் சிலாபமும் | குருநாகல் | பதுளை | காலி | வவுனியா | மாத்தளை | அநுராதபுரம் | அம்பாந்தோட்டை | திருகோணமலை | மட்டக்களப்பு | பொலன்னறுவை | மன்னார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. ஏற்றுமதி விவசாயம் | 29,574 | 106,867 | 107,680 | 184,058 | 263,051 | 151,471 | 81,046 | 250 | 18,266 | 45,930 | 147,758 | 105,174 | — | 42,472 | — | 6 | 130 | 532 | — | — | 1,284,265 |
| 2. ஏனைய விவசாயம் | 2,131 | 35 | 311 | 548 | 105 | 12 | 209 | 85 | 125 | 22 | 235 | 2,206 | 66 | 181 | 291 | 625 | 26 | 143 | 48 | 51 | 7,455 |
| 3. சுரங்கத் தொழிலும், பார்க்குழித்தொழிலும் | 3,591 | 35 | — | 1 | — | — | 59 | — | 7 | 40 | 10 | 10 | — | 86 | — | — | — | — | — | — | 3,839 |
| 4. தயாரிப்புத் தொழில் | 184,899 | 1,854 | 41,56 | 1,186 | 6,864 | 1,023 | 8,568 | 5,437 | 15,993 | 12,252 | 2,172 | 8,197 | 175 | 2,915 | 635 | 592 | 660 | 4,721 | 899 | 809 | 264,007 |
| 5. கட்டட ஆக்கம் ... | 12,887 | 341 | 104 | 383 | 4,015 | 245 | 313 | 737 | 240 | 357 | 1,260 | 370 | 20 | 219 | 20 | 21 | 130 | 127 | 442 | 12 | 22,244 |
| 6. வணிகமும், போக்குவரத்தும் ... | 140,102 | 5,875 | 4,226 | 5,604 | 15,547 | 6,320 | 8,130 | 7,080 | 3,816 | 9,219 | 9,403 | 3,575 | 1,026 | 2,470 | 2,673 | 1,627 | 3,061 | 3,965 | 2,214 | 597 | 236,530 |
| 7. பணிகள் ... | 72,678 | 1,997 | 2,753 | 2,320 | 7,269 | 1,705 | 3,217 | 2,482 | 1,015 | 3,358 | 3,410 | 11,694 | 311 | 2,037 | 1,538 | 775 | 3,342 | 2,527 | 445 | 211 | 125,086 |
| 8. பகுக்கப்படாதவை ... | 7,715 | 60 | 3,010 | 88 | 376 | 93 | 265 | 75 | 707 | 183 | 42 | 276 | 8 | 167 | 30 | 20 | 18 | 456 | 149 | 75 | 13,813 |
| மொத்தம் ... | 453,577 | 117,064 | 122,240 | 194,188 | 297,227 | 160,870 | 101,807 | 16,146 | 40,169 | 71,361 | 164,290 | 131,502 | 1,606 | 50,549 | 5,187 | 3,666 | 7,367 | 12,471 | 4,197 | 1,755 | 1,957,239 |

குறிப்பு, (அ) ஊ. சே. நி. இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்குத் தொடர்பான எண்தொகைகள். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(ஆ) எண்தொகைகள் தற்காலிகமானவை.

(i) இவை தொழிலைவிட்டு நீங்கியும், ஊ. சே. நி. உடன் வரவு நிலுவைகளைத் தொடர்ந்தும் வைத்திருக்கும் ஊழியர்களையும் உள்ளடக்கும்.

(ii) இவை அங்கீகரிக்கப்பட்ட சேமநிதிகளை வைத்திருக்கும் வர்த்தகங்களிலுள்ள தொழில்களை உள்ளடக்கமாட்டா.

(iii) தற்போது வேறு தகவல்கள் இல்லாமையால் கைத்தொழிலின்படியான இவ்வகையீடு நிறுவனத்தின் பெயரினால் காட்டப்பட்டுள்ள தொழில்கொள்வோரின் கைத்தொழிற்றன்மையை அடிப்படையாகக் கொண்டது. சில வேளைகளில் இந்நிறுவனங்கள் தங்களின் கைத்தொழிலின் தன்மையைக் காட்டவில்லை. எனவே, இது திருத்தம்பெறாத வகையீடாகும்.

**4. (ஆ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமநிதியங்களிலுள்ள ஊழியர்கள் (அ. த. சே. நி.)**

மத்திய வங்கி நடைமுறையாண்டில் இவ்வொவ்வொரு நிதியங்களிலும் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் அவர்களின் தொழில் தன்மையையும் தரும்படி இந்நிதியங்களை வேண்டியது. இதற்குக்கிடைத்த வரவேற்பு நிறைவுடையதாகவிருந்தது. மறுமொழி கிடையாத நிதியங்களைப் பொறுத்த வரை தொழிற்றிணைக்களத்தினுல் அனுப்பப்பட்ட தரவுப்பத்திரங்களிலேயே வங்கி தங்கியிருக்க வேண்டியிருந்தது. கீழேதரப்பட்டுள்ள அட்டவணை 11(ஐ) 6 அ. த. சே. நிதிக்குக் கீழ் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களைக் கைத்தொழில் வகையில் பகுப்பாய்வு செய்து தருகின்றது.

**அட்டவணை II (ஒ) 6**

**அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமநிதிகளிலுள்ள ஊழியர்கள்**

| | 1971 | 1972 | 1972/71 சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| 1. ஏற்றுமதி விவசாயம் .. | 12,166 | 11,047 | — 9.2 |
| 2. ஏனைய விவசாயம் ... | 16 | 17 | + 6.3 |
| 3. சுரங்கத் தொழிலும் பார்க்குழித் தொழிலும் | 124 | 153 | + 23.4 |
| 4. தயாரிப்புத் தொழில் ... | 21,576 | 22,071 | + 2.3 |
| 5. கட்டடவாக்கம் ... | 2,954 | 2,956 | + 0.1 |
| 6. வர்த்தகமும் போக்குவரத்தும் ... | 59,340 | 59,508 | + 0.3 |
| 7. பணிகள் | 22,187 | 25,923 | + 16.8 |
| 8. பகுக்கப்படாதவை ... | 10,151 | 8,593 | — 15.4 |
| மொத்தம் ... | 128,514 | 130,268 | + 1.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.
தொழிற்றிணைக்களம்

சில பெரிய கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்களாகிய இலங்கைப் போக்கு வரத்துச் சபையிலும்; இலங்கை மின்சார சபையிலும் பணிபுரியும் ஊழியர்களையும் அ. த. சே நிதியங்கள் உள்ளடக்குகின்றன.

அ. த சே. நிதியங்களில் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களின் சதவீத அதிகரிப்பு 1972இல் 1.4 சதவீதமாகும். 1972இல் சுரங்கத்தொழிலிலும் பார்க்குழித் தொழிலிலும் (23.4 சதவீதத்தாலும்) சேவைகளிலும் (16.8 சதவீதத்தாலும்) பெருமளவு அதிகரிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. ஏற்றுமதி வேளாண்மை, — 9.2 சதவீதத்தாலும், வகைப்படுத்தப்படாத வகுப்பைச் சார்ந்த தொழில் 15.4 சதவீதத்தாலும் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்துள்ளன. ஏனைய வேளாண்மை, தயாரிப்புத் தொழில்கள் 6.3 சதவீத, 2.3 சதவீத அதிகரிப்புக்களை முறையே பதிவு செய்துள்ளன. கட்டட அமைப்பிலும் வர்த்தகத்திலும் போக்கு வரத்திலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் புறக்கணிக்கத்தக்கவையாகும். 1972இலும் 1971இலும் வர்த்தகத்திலும் போக்குவரத்துத் தொகுதியிலுமே மிகக்கூடிய சதவீதமான ஊழியர்கள் பணிபுரிந்தனர். முன்னையதில் 45.7 சத

வீதமானேரும் பின்னையதில் 46.2 சதவீதமானேரும் பணியாற்றினர். பணிகளில் பணிபுரிந்தோரின் எண்ணிக்கை 1972இல் 20 சதவீதமாகவும் 1971 இல் 17 சதவீதமாகவும் விளங்கியது. ஏற்றுமதி வேளாண்மையைப் பொறுத்தவரை தொடர்பான சதவீதங்கள் 8.5 சதவீதமாகவும் 9.5 சதவீதமாகவும் இருந்தன. மேற்குறித்த இவ்விரு ஆண்டுகளிலும் ஏனைய வேளாண்மை, சுரங்கத் தொழில், பார்க்குழித் தொழில், ஆகிய துறைகளிற் தொழில் புரிந்தோரின் விகிதாசாரம் புறக்கணிக்கத் தக்க முறையில் அமைந்துள்ளது.

### 5. தொழில்நாடிப் பதிவுசெய்தோர்

தொழில் வாய்ப்பு நிலையத்தில் வேலைநாடியும், சிறந்த தொழில் தேடியும் பதிவுசெய்தோரின் எண்ணிக்கை 1972இறுதியில் 445,422ஆக விளங்கியது. ஒப்பு நோக்குகையில் சென்ற ஆண்டு இத்தகையோரின் எண்ணிக்கை 437,400 ஆகியிருந்தது. 1972இல் தொழில்நுட்ப, எழுதுவினைஞர், தொழில்நாடிப் பதிவு செய்தோரின் எண்ணிக்கை 7,140ஆல் வீழ்ச்சியுற சென்ற ஆண்டில் ஏற்பட்ட வீழ்ச்சி 2,793 ஆகும். 1972இல் பதிவுசெய்த தேர்ச்சிபெற்ற வகுப்பைச் சார்ந்தோரின் எண்ணிக்கை 579 ஆகும். இது 1971இலும் குறைவுடையதாக இருந்தது. 1971இலும் 1972இலும் தேர்ச்சிபெறாத தொழிலுக்குப் பதிவுசெய்தோரின் எண்ணிக்கை ஏறக்குறைய 21,800 ஆகவும் 12,500 ஆகவும் விளங்கியது.

**அட்டவணை II (ஒ) 7**

**நாட்டின் தொழிலிணைப்பு நிலையங்களின் பதிவேடுகளின்படி தொழில் அல்லது நல்ல தொழில் நாடிப் பதிவு செய்தோரின் எண்ணிக்கை**

| | கால முடிவுக்குரிய எண்தொகைகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | தொழில்நுட்ப, எழுது வினைஞர்கள் | தேர்ச்சி பெற்ற | ஓரளவு தேர்ச்சிபெற்ற | தேர்ச்சி பெறாத | மொத்தம் |
| 1970 திசெம்பர் ... | 99,103 | 37,876 | 96,923 | 177,018 | 410,920 |
| 1971 மாச்சு ... | 96,913 | 38,116 | 96,982 | 182,650 | 414,661 |
| யூன் ... | 96,100 | 38,889 | 94,035 | 181,513 | 410,537 |
| செத்தெம்பர் ... | 94,496 | 41,252 | 97,711 | 192,184 | 425,643 |
| திசெம்பர் ... | 96,310 | 42,655 | 99,520 | 198,915 | 437,400 |
| 1972 மாச்சு ... | 91,530 | 42,890 | 100.393 | 204,461 | 439,274 |
| யூன் ... | 91,223 | 42,949 | 99,861 | 201,199 | 435,232 |
| செத்தெம்பர் ... | 91,114 | 43,378 | 100,374 | 206,943 | 441,809 |
| திசெம்பர் ... | 89,170 | 43,234 | 101,554 | 211,464 | 445,422 |

மூலம்: தொழிற்றிணைக்களம்

## 6. தொழில் உறவுகள்

1972இல் நடைபெற்ற வேலைநிறுத்தங்களின் தரவையும், தனியார்துறை யில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோரின் எண்ணிக்கையையும், இழந்த வேலை யாள் நாட்களின் எண்ணிக்கையையும், அட்டவணை II (ஒ) 8 தருகின்றது.

### அட்டவணை II (ஒ) 8

### தனியார் வர்த்தகத் துறையில் வேலைநிறுத்த நிலை

| ஆண்டு | பெருந்தோட்டங்கள் | | | ஏனைய தொழில் | | |
|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத் தங்களின் எண் ணிக்கை | பங்கு பற்றிய வேலையாட்கள் | இழந்த ஆள் வேலை நாட்கள் | வேலை நிறுத் தங்களின் எண் ணிக்கை | பங்கு பற்றிய வேலையாட்கள் | இழந்த ஆள் வேலை நாட்கள் |
| 1960 ... | 123 | 42,528 | 259,948 | 37 | 4,839 | 15,139 |
| 1961 ... | 90 | 29,223 | 317,866 | 39 | 38,013 | 170.372 |
| 1962 ... | 138 | 42,569 | 193,792 | 550 | 25,730 | 801,882 |
| 1963 ... | 174 | 62,511 | 359,905 | 58 | 21,819 | 479,678 |
| 1964 ... | 201 | 68,009 | 611,060 | 103 | 21,400 | 274,623 |
| 1965 ... | 175 | 70,929 | 482,259 | 55 | 10,085 | 89,952 |
| 1966 ... | 132 | 138,259 | 4,117,264 | 32 | 4,592 | 34,351 |
| 1967 ... | 194 | 74,968 | 414,636 | 36 | 14,883 | 284,709 |
| 1968 ... | 171 | 65,909 | 722,690 | 26 | 11,308 | 265,726 |
| 1969 ... | 146 | 56,861 | 406,150 | 43 | 6,317 | 58,015 |
| 1970 ... | 254 | 125,530 | 1,030,310 | 86 | 23,488 | 281,253 |
| 1971 ... | 125 | 50.847 | 273,531 | 32 | 39,955 | 239,760 |
| 1972 ... | 164 | 52,112 | 273,351 | 22 | 2,205 | 25,081 |

மூலம்: தொழிற்றிணைக்களம்.

1972இல் பெருந்தோட்டத்துறையில் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் 164ஆகும், ஒப்பிடுகையில் 1971இல் 125 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் அதி கரிப்பு கவனிக்கத்தக்கதாய் இருந்தது. 1971இல் 50,847 ஆகவிளங்கிய தொகை 1972இல் 52,112 ஆக அதிகரித்தது. எனினும், இழந்த வேலைநாட்களின் எண் ணிக்கை 180நாட்களால் வீழ்ச்சியுற்று, 273,351ஆக விளங்கியது. எனினும், ‘ஏனைய தொழில்’ என்ற வகுப்பைப் பொறுத்தவரை 1971உடன் ஒப்பிடுகை யில் 1972இல் குறைந்த வேலை நிறுத்தங்களே நடைபெற்றன. அத்துடன் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளரைப் பொறுத்தவரையும் இழந்த ஆள் வேலைநாட்களைப் பொறுத்தவரையும் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி நில வியது. 1971இல் 39,955 தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்திருக்க 1972இல் 2,205 வேலையாட்களே வேலைநிறுத்தம் செய்தனர். அத்துடன் 1971இல் இழந்த வேலைநாட்கள் 239,760 நாட்களாயிருக்க 1972இல் 25,081ஆக விளங்கியது.

1970இன் எண்தொகைகளுடன் ஒப்பிடுகையில் 1971இல் மொத்த வேலை நிறுத்தங்களில் 51 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டது. 1972இல் இந்நிலை 1971இலும் பார்க்க 31சதவீதத்தால் வேலைநிறுத்தங்களில் அதிகரிப்பு ஏற்பட்டது. 1972இல் பெருந்தோட்டங்களில் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் 164ஆகும். இவற்றுள் 108 ஆண்டின் இறுதி 6 மாதங்களில் நடைபெற்றது.

1972இல் நடைபெற்ற வேலைநிறுத்தங்களில் கூலித்தகராறுகளிலும் பார்க்க பொது வேலைநிலைமைகள் முக்கியத்துவம் பெற்றன. வேலைநிறுத்தங்களில் 28சதவீதம் சிறந்த வேலை ஒழுங்குகள் பற்றியும் கனிட்ட அலுவலாளருடன் நடைபெற்ற தகராறுகள் பற்றியதாகவே விளங்கியது. எனினும், 1972இல் அத்தியாவசிய சேவைகள் கட்டளை நடைமுறையில் இருந்தபோதும் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லை.